WILD FOREST FOUNDATION
wild-forest.org

பக்கங்கள்: 06

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:04 | 05.11.2023 ஞாயிற்றுக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

## மேச்சல் தரை விவகாரம்

## 6 பல்கலைக்கழக மாணவர்கள் கைது



மட்டக்களப்பு சித்தாண்டியில் மேச்சல் தரை பண்ணையாளர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்த 6 பல்கலைக்கழக மாணவர்களை பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் இன்று ஞாயிற்றுக்கிழமை (05) கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்று காலை 9 மணிக்கு சித்தாண்டி முருகன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்று கூடிய மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளரின் இடம் வரை சென்று அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் முடிவுற்ற பின்னர், மாணவர்கள் பஸ்வண்டியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தை நோக்கி சென்றபோது பின்னால் சென்ற சந்திவெளி பொலிஸார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பஸ்வண்டியை நிறுத்தி அதில் 6 மாணவர்களை கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் சட்டவிரோத ஆர்ப்பாட்டம், பொது வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைத்தமை ஆகிய குற்றசாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தையிட்டி போராட்டக்காரர்களுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளை

5 மற்றும் 6 ஆம் திகதிகளில் திஸ்ஸ விகாரையில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. எனவே, அந்த பூஜை வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என மல்லாகம் நீதிமன்றம் கட்டளை ஒன்றை பிறப்பித்துள்ளது. அந்தக் கட்டளையில் உள்ளதாவது,

மல்லாகம் நீதவான் நீதிமன்றம் வழக்கு இல: AR/3055/2023

**1. சட்டத்தரணி காண்டீபன்**

**2. சட்டத்தரணி சுகாஸ்**

**3. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார்**


**4. செல்வராஜா கஜேந்திரகுமார்**

**மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்கள்.**

கட்டளை

மேற்குறிப்பிட்ட தங்கள் அனைவருக்கும்!

நாளைய தினம் அதாவது 05.11.2023 ஆம் திகதி


மல்லாகம் நீதவான் நீதிமன்றம்
வழக்கு இல: AR/3055/2023
To:-
1. சட்டத்தரணி காந்தீபன்
2. சட்டத்தரணி சுகாஸ்
3. பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார்
4. செல்வராஜா கஜேந்திரகுமார்

மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவர்கள்!

கட்டளை

மேற்குறிப்பிட்ட தங்கள் அனைவருக்கும் !

நாளைய தினம் அதாவது 05.11.2023 ம் திகதி மற்றும் 06.11.2023 ம் தினங்களில் திஸ்ஸ விகாரையில் 'கஜினமகா உற்சவம்' நடைபெற இருப்பதாகவும் அதற்கு தங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்தினால் குழப்பம் ஏற்படுத்தப்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் மேலும், தமிழ் சிங்கள மக்களிடையே இனவாதத்தினை தூண்டக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மன்றுக்கு அறிக்கையிடப்பட்டு குற்றவியல் நடபடிமுறைச்சட்டக்கோவையின் பிரிவு 106 இன் கீழ் தங்களுக்கெதிராக அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடாது என்ற கட்டளையினை வழங்குமாறு பலாலி பொலிஸாரினால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விண்ணப்பம் மற்றும் அறிக்கை என்பவற்றில் கவனம் செலுத்தி நாளைய தினமான 05.11.2023 திகதியும் 06.11.2023ம் திகதியன்றும் திஸ்ஸ மகா விகாரைக்கு அண்மையில் சொத்துக்களுக்கோ அல்லது ஆட்களுக்கோ ஆபத்துக்கள் எவையும் ஏற்படக்கூடாது என்ற கரிசனையின் மீது பின்வருமாறு மன்றினால் கட்டளையாக்கப்படுகின்றது:-

1. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் திஸ்ஸ விகாரையில் நடைபெறவிருக்கும் கஜினமகா உற்சவத்திற்கு தடைகளோ குழப்பங்களோ ஏற்படுத்தக்கூடாது.
2. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிக்கையில் அமைதிக்குப்பாதகம் ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துக்களுக்கோ அல்லது ஆட்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது.

காயத்திரி சைலவன்
மேலதிக மாவட்ட நீதிபதி மற்றும்
மேலதிக நீதவான்
04.11.2023

மற்றும் 06.11.2023 ஆம் தினங்களில் திஸ்ஸ விகாரையில் ‘கஜினமகா உற்சவம் நடைபெற இருப்பதாகவும் அதற்கு தங்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்தினால் குழப்பம் ஏற்படுத்தப்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும் மேலும், தமிழ் சிங்கள மக்களிடையே இனவாதத்தினை தூண்டக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் மன்றுக்கு அறிக்கையிடப்பட்டு குற்றவியல் நடபடிமுறைச்சட்டக் கோவையின் பிரிவு 106 இன் கீழ் தங்களுக்கெதிராக அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற கட்டளையினை வழங்குமாறு பலாலி பொலிஸாரினால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விண்ணப்பம் மற்றும் அறிக்கை என்பவற்றில் கவனம் செலுத்தி இன்று 05.11.2023 திகதியும் 06.11.2023 ஆம் திகதியன்றும் திஸ்ஸ மகாவிகாரைக்கு அண்மையில்

(பக் : 02)

## ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம்

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு கூட்டம் மன்னாரிலுள்ள டெலோ அலுவலகத்தில் இன்று காலை 10 மணியளவில் கூட்டம் ஆரம்பித்தது. இதில் டெலோ தரப்பில் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரன் மற்றும் சுரேன் குருசாமியும ஈ.பி.ஆர்.எல்.எப் தரப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவசக்தி ஆனந்தனும் புளொட் அமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன் - ஆர்.ராகவன்,



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் சார்பில் வேந்தன், துளசி மற்றும் நகுலேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தையிட்டி போராட்டக்காரர்களுக்கு நீதிமன்றத்தால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொத்துக்களுக்கோ அல்லது ஆட்களுக்கோ ஆபத்துக்கள் எவையும் ஏற்படக்கூடாது என்ற கரிசனையின் மீது பின்வருமாறு மன்றினால் கட்டளையாக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் திஸ்ஸ கஜின மகா உற்சவத்திற்கு குழப்பங்கள் ஏற்படுத்தக்கூடாது, விகாரையின் வழிபாட்டுக்குத் தடை செய்யக்கூடாது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் அடிப்படை கீழ் உரிமைகளை அனுபவிக்கையில் அமைதிக்குப் பாதகம் ஏற்படுத்தும் வகையிலோ அல்லது சொத்துக்களுக்கோ அல்லது ஆட்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்படக்கூடாது என மேலதிக மாவட்ட நீதவான் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.






## போராட்டத்துக்குத் தயாராகும் அமைப்புகள்




மின் கட்டண உயர்வு, எரிபொருள் மற்றும் எரிவாயுவிலை உயர்வு, அடுத்த ஆண்டு முதல் வட் வரி உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, சுகாதார சேவை குறைபாடுகள், ஆசிரியர் சேவைகளில் சிக்கல்கள், அரசு நிறுவனங்களை மறுசீரமைத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி நாடெங்கும் இம்மாத நடுப்பகுதியில் தொடர் போராட்டங்களை நடத்த சில கட்சிகளும் அமைப்புகளும் தயாராகி உள்ளன என புலனாய்வு அமைப்புகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## போர் நிறுத்தத்திற்கு அரபு நாடுகள் கோரிக்கை

காஸா பகுதியில் உடனடியாக போர் நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும் என அரபு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

காஸா பகுதியில் நிலவும் மோதல் நிலைமை குறித்து கலந்துரையாடுவதற்காக இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று (04) ஜோர்தானில் அரபு நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார். அரபு நாடுகளின் பிரதிநிதிகள் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹமாஸ் மீண்டும் பலம்பெற அனுமதிக்கலாம் என்பதால், போர் நிறுத்தப் பிரகடனத்திற்கு தாம் உடன்படவில்லை என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல்-ஹமாஸ் மோதலில் 9,488 பாலஸ்தீனியர்கள் பலி

ஒரு மாதமாக நடைபெறும் இஸ்ரேல்-ஹமாஸ் மோதலால் காஸா பகுதியில் இஸ்ரேலிய தாக்குதல்களில் பாலஸ்தீனியர்களின் இறப்பு எண்ணிக்கை சனிக்கிழமை 9,488 ஐ எட்டியுள்ளது என்று காஸா அடிப்படையிலான சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



இதற்கிடையில், பாலஸ்தீன பகுதியில் மேலும் 24,000 பேர் காயமடைந்துள்ளதாக அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல்-கெத்ரா தெரிவித்தார். சனிக்கிழமையன்று மத்திய காஸா பகுதியிலுள்ள அல்-நுசைராத் அகதிகள் முகாமில் இஸ்ரேலிய தாக்குதல்களால் குறைந்தது 6 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக அமைச்சகம் கூறியது, காஸா பகுதிக்கு தெற்கே உள்ள ரஃபா நகரில் 4 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

# காஸாவில் சிக்கிய 67 அவுஸ்திரேலியர்கள்

காஸாவில் சிக்கித் தவிக்கும் 67 அவுஸ்திரேலியர்களை வெளியேற்றும் பணியை அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.


காஸாவில் உள்ள 67 அவுஸ்திரேலியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறுவதற்கான அரசாங்க உதவிக்காக வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறையில் (DFAT) பதிவுசெய்துள்ள 67 அவுஸ்திரேலியர்களைப் பாதுகாப்பான வழியில் செல்லுமாறு தூதரக அதிகாரிகள் அழுத்தம் கொடுத்து வருவதாக வெளியுறவுத்துறை உதவி அமைச்சர் டிம் வாட்ஸ் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். 25 அவுஸ்திரேலிய குடிமக்கள், நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் புதன் மற்றும் வியாழன் காஸாவில் இருந்து எகிப்திற்கு ரஃபா கிராசிங் வழியாக வெளியேற்றப்பட்ட முதல் குழுக்களில் அடங்குவர்.

# நிலநடுக்கங்கள் தொடர்வதால் மக்களை வெளியேற்ற முடிவு

செப்ரெம்பர் முதல் இதுவரையான காலப் பகுதிக்குள் 2,500 நிலநடுக்கங்களை சூப்பர் எரிமலை ஏற்படுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க புவியியல் சங்கத்தின் கூற்றுப்படி, ஒரு சூப்பர் எரிமலை என்பது எரிமலை வெடிப்பு குறியீட்டில் 8 அளவு வெடித்த எரிமலை மையம் என வரையறுக்கப்படுகிறது.

இந்நிலையில் சூப்பர் எரிமலையைச் சுற்றி நிலநடுக்கங்கள் தொடர்கின்ற நிலையில் மக்களை கூட்டமாக வெளியேற்ற இத்தாலி திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




நேபிள்ஸுக்கு வெளியே உள்ள Pozzuoli நகரில் வசிப்பவர்கள், காம்பி ஃப்ளெக்ரேயின் எரிமலை பகுதியில் வசிப்பதால் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

80-சதுர மைல் தாழ்வான பகுதியில் ஒரு டசின் கூம்பு வடிவ எரிமலைகள், பல ஏரிகள் மற்றும் அரை மில்லியன் குடியிருப்பாளர்கள் உள்ளனர். 80,000 மக்கள் இதன் சுற்றுவட்டாரத்தில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இத்தாலிய அரசாங்கம் கடந்த மாதம் நிலைமையை மதிப்பாய்வு செய்துள்ளதுடன், கட்டடங்கள் இடிந்து விழும் அபாயம் இருப்பதாக அதிகாரிகள் கருதினால், மக்களை மொத்தமாக வெளியேற்றுவதற்கு அதிகாரிகள் அழைப்பு விடுப்பார்கள் என்று தெரிவித்துள்ளது.

# ஹமாஸின் பிடியில் 37 குழந்தைகள்



ஹமாஸினால் கடந்த மாதம் 7 ஆம் திகதி பிடிக்கப்பட்ட பணயக்கைதிகள் 242 பேரில், 37 பேர் 18 வயதிற்கும் குறைவான குழந்தைகள் என்று ஒக்ரோபர் 7 அன்று கடத்தப்பட்டவர்களைத் திரும்பக் கோருவதற்காக அமைக்கப்பட்ட குழுவான தி ஹோஸ்டேஜ் அண்ட் மிஸ்ஸிங் ஃபேமி லீஸ் ஃபோரம் அறிவித்துள்ளது.

## ‘சீனாவுடன் ஆக்கபூர்வமாக செயல்படுவேன்’

# அவுஸ்திரேலிய பிரதமர்

‘நாடுகளுக்கு இடையிலான ஆக்கபூர்வமான பொருளாதார ஈடுபாடு உறவுகளை உருவாக்க உதவுகிறது. அதனால்தான் நான் வழிநடத்தும் அரசாங்கம் சீனாவுடன் தொடர்ந்து ஆக்கபூர்வமாகச் செயல்படும்’ என்று அவுஸ்திரேலிய பிரதமர் அல்பானீஸ் கூறினார்.

ஷாங்காயில் சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சியின் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். சீனாவில் அவர் நான்கு நாட்கள் தங்குவார்.

ஏழு ஆண்டுகளில் அவுஸ்திரேலியத் தலைவர் ஒருவரின் விஜயம் இதுவாகும். இரு நாடுகளும் வர்த்தகத்தில் பில்லியன் கணக்கான டொலர்களை பாதித்த இராஜதந்திர பனிப்போருக்குப் பிறகு விடயங்களைச் சரிசெய்ய முயல்கின்றன.

அல்பானீஸ் நிர்வாகம் சீனாவுடன் மிகவும் இணக்கமான உறவுகளை நாடியுள்ளது, அதேநேரத்தில் பசுபிக் பகுதியில் பெய்ஜிங்கின் வளர்ந்து வரும் செல்வாக்கிற்கு எதிராக பின்னுக்குத் தள்ளுகிறது. ஞாயிற்றுக்கிழமை ஆசியா பசுபிக் பிராந்தியத்தின் வளர்ச்சியானது ‘எதிர்காலத்தை நாம் காணக் கூடிய லென்ஸ்’ என்று கூறினார். ‘சீனாவுடனான அவுஸ்திரேலியாவின் உறவு இவை அனைத்திலும் ஒரு முக்கிய பகுதியாகும்’ என்றும் கூறினார்.

# காஸாவில் மக்களுக்கு பாதுகாப்பான இடம் எதுவுமில்லை ஐ.நா

இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளதோடு, பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, இஸ்ரேல் காஸாவிற்குள் வான் வழித்தாக்குதலை முன்னெடுத்து வருகின்றது.

ஹமாஸ் அமைப்பினரின் இராணுவத் தளங்களை குறிவைப்பதாக தெரிவித்து அகதிகள் முகாம் அமைந்துள்ள பகுதிகள் மீது வான் தாக்குதல் இடம்பெறுகின்றது.

வடக்கு காஸாவின் ஜபாலியாவில் ஐக்கிய நாடுகள் சபையால் பள்ளிகளில் இருந்து மக்கள் தங்குமிடமாக மாற்றப்பட்ட கட்டடங்கள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியது.

ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணி நிறுவனத்தின் தங்கும் இடங்கள் கடந்த 24 மணி நேரத்திற்குள் தாக்கப்பட்டு இருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

இதனால், காஸாவில் தற்போது மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு இடம் எதுவுமில்லை எனவும் பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இத்தாக்குதலில் இருப்பிடத்தை இழந்த மக்கள், ஐ.நா கட்டடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# கேள்விக்குறியான இலவசக் கல்வி

**இலவசக் கல்விக் கொள்கைகளுக்கு எதிரான மக்களின் பொருளாதார பலத்தின் அடிப்படையிலேயே தரமான கல்விக்கான அணுகல் தீர்மானிக்கப்படுவதால் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவினால் நீண்ட போராட்டத்தின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விக் கொள்கை இன்று பெயரளவிற்கு மட்டுமே உள்ளது என கலாநிதி ஹரிணி அமரசூரிய இன்று தெரிவித்தார்.**

**தரமான கல்விக்கான அணுகல் மக்களின் பொருளாதார பலத்தால் தீர்மானிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில் சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவினால் இலவசக் கல்விக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், தரமான கல்விக்கான அணுகல் இன்று மக்களின் பொருளாதார சக்தியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.**

**“அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்பை உறுதி செய்யும் இலவசக் கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்த பல ஆண்டுகளாகப் போராடிய சி. டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா, மக்களின் பொருளாதாரச் சக்தியின் அடிப்படையில் கல்விக்கான அனுமதியை முடிவு செய்யக்கூடாது என்ற அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலவசக் கல்வி இன்று பெயரளவில் மட்டுமே உள்ளது. இன்று நாம் தரமான கல்வியைப் பெறுகின்றோமா? இல்லையா? என்பதை எமது பொருளாதார சக்தியே தீர்மானிக்கின்றது” என பதுளை ரிதிமாலியத்தவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் அவர் தெரிவித்தார்.**

**இலங்கையில் இலவசக் கல்விக் கொள்கை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டால், பிரபல பாடசாலைகள் என்ற கருத்து இன்று இருக்காது. இன்று கல்வித்துறையில் உள்ள முரண்பாடுகள் முக்கியமாக ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இருந்து கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை குறைப்பதன் காரணமாக உள்ளது என்றார்.**

**ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை அரசுகள் தொடர்ந்து குறைத்து வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.**

**இலங்கையின் வரப் பிரசாதங்களில் இலவசக் கல்வி மிகமுக்கியமானது. இலவசமாகப் படித்து வசதி வாய்ப்பு வந்தவுடன் பலர் இலவசக் கல்வியை ஏளனமாகப் பார்க்கிறார்கள். தமது பிள்ளைகளை சர்வதேசப்பாடசாலைகளில் சேர்க்கிறார்கள். இலவசமாகப் படித்து பட்டம் பெற்று வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்ப விரும்புவதில்லை.**

**வசதி குறைந்த மாணாவர்களை ஊக்குவிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தரம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வசதியான பிள்ளைகள் அதிகளவில் சித்தியடைகிறார்கள். பெரிய பாடசாலைகளின் மாணவர்கள் அதிக புள்ளிகளைப் பெற்று சாதனை செய்கிறார்கள். வசதி குறைந்த மாணவர்கள் எங்காவது ஒரு சில நேரங்களில் சாதனை செய்கிறார்கள். அதிகமான ஆசிரியர்களும் ரியூஸன் கொடுப்பதிலேயே காலத்தைச் செலவிடுகிறார்கள்.**

**பெயரளவில்தான் இலவசம் இருக்கிறதே தவிர முழுமையான இலவசக் கல்வியை மாணவர்கள் பெறும் விகிதம் குறைவடைந்துள்ளது. அரசியல்வாதிகள் பாடசாலைகளில் கட்டடங்களைக் கட்டி திறப்புவிழா செய்வதில்தான் குறியாக இருக்கிறார்களே தவிர கல்விக்காக நிதி ஒதுக்குவது இல்லை.**

# தடுப்பூசி மோசடி தொடர்பாக இன்னொரு குற்றச்சாட்டு



இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்து குப்பிகளைத் தயாரிப்பதற்காக தேசிய இரத்த மையத்தில் இருந்து இரத்தம் பெறப்பட்ட தகவல் வெளியாகியுள்ளதாக சுகாதார தொழில் வல்லுநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு தேவை எனக் கூறி இரத்தம் பெறுவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். இதேவேளை, இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகள் தயாரிப்பில் இடம்பெற்ற மோசடி தொடர்பான விசாரணைகளில் தாமதம் ஏற்படுவது பிரச்சினைக்குரியது என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கொழும்பு மாநகர சபை ஆட்சியின் கீழ் விகாரமஹாதேவி பூங்கா



விகாரமஹாதேவி பூங்காவின் நிர்வாகத்தை கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

# கொத்துரொட்டி விலை அதிகரிப்பு

கொத்துரொட்டி உட்பட சில உணவுப் பொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அகில இலங்கை உணவக மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# வெள்ளவத்தையில் கரையொதுங்கிய யாழ் இளைஞனின் சடலம்



யாழ்ப்பாண தமிழ் இளைஞர் ஒருவரின் சடலம் இன்று காலை வெள்ளவத்தை Hamas Avenue இற்கு முன்னால் உள்ள கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 28 வயதான சர்வானந்தா கிருசாந் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரின் முகத்திலும் உடலிலும் அடிகாயங்கள் காணப்படுகின்றன.

# பேக்கரிப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

எரிவாயு விலை அதிகரிப்புக் காரணமாக பேக்கரி கைத்தொழிலை பராமரிக்கும் திறன் இல்லை எனவும் பேக்கரிப்பொருட்களின் விற்பனை ஏற்கெனவே 25% குறைந்துள்ளதாகவும் எரிவாயுவின் விலை அதிகரித்தாலும் பேக்கரிப்பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது எனவும் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

# காணிக்கு வரி அறவீடு

இலங்கையில் காணிக்கு வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்காகவே இந்த வரி விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள நிலத்தின் மதிப்பை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப பல்வேறு வகைகளின் கீழ் இந்த வரியை வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.




# டெங்கு நோயாளர் தொகை அதிகரிப்பு





டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 69,000 ஐ தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிக்கை ஒன்றின் ஊடாக தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இது வரையிலான காலப்பகுதியில், அதிகபட்சமாக கொழும்பு மாவட்டத்தில் 14,634 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாண ரீதியில் அதிகபட்சமாக மேல் மாகாணத்தில் 33,139 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த ஏழு நாட்களில் மொத்தம் 1,453 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் தமது சுற்றுச்சூழலை டெங்கு பரவல் ஏற்படாத வகையில் சுத்தமாக வைத்துக் கொள்வதுடன் டெங்கு நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 20,000 பொலிஸார் நியமனம்

பொலிஸ் உத்தியோகத்தர்களின் பதவி விலகல், ஓய்வு மற்றும் இயலாமை குறித்த காரணங்களினால் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதனால் புதிதாக ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

20,000 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு புதிதாக நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிலான் அலஸ் தெரிவித்துள்ளார்.

# லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலையில் திருத்தம்

லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்வது பற்றி நாளை (06)தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லாஃப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை தொடர்ந்தும் மூன்றாவது முறையாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில், லிட்ரோ நிறுவனம் எரிவாயு விலையை அதிகரித்திருந்தது. எனினும், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர், லிட்ரோ எரிவாயுவின் விலை ஐந்து தடவைகள் திருத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு தடவை மாத்திரமே எரிவாயுவின் விலையை அதிகரித்திருந்தது.



# மண் சரிவில் ஒருவர் பலி

கண்டி - மஹியங்கனை வீதியின் ரம்புக்வெல்ல பிரதேசத்தில் நேற்று இரவு மோசமான வானிலை காரணமாக கடையின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் பழக்கடைக்குள்ளிருந்த 37 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

# தமிழரசுக் கட்சியினர் வவுனியாவில் போராட்டம்

தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்தினாலும் அரச நிறுவனங்கள் மற்றும் பிக்குகளால் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்புக்கும் இனவிரோத நடவடிக்கைகளுக்கும் எதிராக வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.






# அரச ஊழியர்களின் சம்பளம் உயர்வு

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சுமார் 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அறிவித்துள்ளார். இது குறித்து அமைச்சரவைக்கும் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சுமார் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கு இந்தச் சம்பள அதிகரிப்பு கிடைக்குமென செய்திகள் தெரிவிக்கின்றன.

# 401 ஓட்டங்கள் அடித்தும் தோற்றது நியூஸ்லாந்து

பெங்களூருவில் நடைபெற்ற உலகக்கிண்ண 35 ஆவது லீக் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்லாந்து 50 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 401 ஓட்டங்கள் அடித்து மிரட்டியது. மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டதால் டி.ஆர்.எஸ்.டி விதிமுறைப்படி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வென்றது.

நியூஸ்லாந்து அணியின் இளம் வீரர் ரச்சின் ரவீந்திரா 108, கப்டன் கேன் வில்லியம்சன் 95 ஓட்டங்கள் எடுத்தனர். பாகிஸ்தான் சார்பில் அதிகபட்சமாக முகமது வாசிம் 3 விக்கெட்டுகள் சாய்த்தார்.

402 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கைத் துரத்திய பாகிஸ்தானுக்கு அப்துல்லா சபிக் 4 ஓட்டங்களில் சௌதீ வேகத்தில் அவுட்டானாலும் பக்கார் ஜமான் அதிரடியாக விளையாடினார். குறிப்பாக மழை வரும் என்பதால் வேகமாக விளையாட வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்ட அவர் 63 பந்துகளில் சதமடித்து மிரட்டினார்.

கப்டன் பாபர் அசாம் தம்முடைய பங்கிற்கு 66* ஓட்டங்களும் பக்கார் ஜமான் 126* ஓட்டங்களும் எடுத்ததால் 25.3 ஓவரில் பாகிஸ்தான் 200/1 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை வந்து போட்டியை நிறுத்தியது. அப்போது நியூஸ்லாந்தைவிட 21 முன்னிலை பெற்றதன் காரணமாக வென்ற பாகிஸ்தான் தங்களுடைய செமி ஃபைனல் வாய்ப்பைத்தக்க வைத்துக் கொண்டது.

மழை வந்ததால் தோல்வியை சந்தித்த நியூஸ்லாந்து பின்னடைவை சந்தித்து செமி ஃபைனல் செல்லத் தங்களுடைய கடைசிப் போட்டியில் வென்றாக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.




# நடப்பு சம்பியனை வீட்டுக்கு அனுப்பிய அவுஸ்திரேலியா

அஹமதாபாத்தில் நடைபெற்ற லீக் போட்டியில் நடப்பு சம்பியன் இங்கிலாந்தை அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இந்தத் தோல்வியால் இங்கிலாந்து உலகக்கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியது.

புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் திண்டாடும் இங்கிலாந்து கண்டிப்பாக வென்றே தீரவேண்டும் என்ற நிலைமையில் நாணயச் சுழற்சியில் வென்று பந்து வீசுவதாக அறிவித்தது. அவுஸ்திரேலியாவுக்கு துவக்க வீரர்கள் ட்ராவிஸ் ஹெட் 11, டேவிட் வார்னர் 15 ஓட்டங்களில் கிறிஸ் ஓக்ஸ் வேகத்தில் ஆட்டமிழந்தனர். இரண்டு விக்கெட்களை இழந்து 38 ஓட்டங்கள் எடுத்த இங்கிலாந்தை 3 ஆவது விக்கெட்டுக்கு 85 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த ஸ்டீவ் ஸ்மித்தை 44 ஓட்டங்களில் அவுட்டாக்கிய அடில் ரசித் அடுத்ததாக வந்த ஜோஸ் இங்லிஷை 3 ஓட்டங்களில் வெளியேற்றினார். மறுபுறம் அரை சதம் கடந்து அசத்திய மார்னஸ் லபுஸ்ஷேன் 71 ஓட்டங்களில் அவுட்டானார்.




இறுதியில் கேமரூன் கிரீன் 47, மார்க்கஸ் ஸ்டோனிஸ் 35, ஆடம் ஜாம்பா அதிரடியாக 29 (19) ஓட்டங்கள் எடுக்க 49.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த அவுஸ்திரேலியா 286 ஓட்டங்கள் எடுத்தது.

இங்கிலாந்து சார்பில் அதிகபட்சமாக கிறிஸ் ஓக்ஸ் 4, அடில் ரசித், மார்க்வுட் தலா 2 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

287 ஓட்டங்களை துரத்திய இங்கிலாந்துக்கு முதல் பந்திலேயே ஜானி பேர்ஸ்டோவை கோல்டன் டக் அவுட்டாகிய மிட்சேல் ஸ்டார்க் அடுத்ததாக வந்த ஜோரூட்டையும் 13 ஓட்டங்களில் வெளியேற்றினார்.

அதனால் 19/2 என்ற சுமாரான துவக்கத்தைப் பெற்ற இங்கிலாந்தை மற்றொரு துவக்க வீரர் டேவிட் மாலனுடன் ஜோடி சேர்ந்த பென் ஸ்டோக்ஸ் நிதானமாக விளையாடி காப்பாற்றப் போராடினார்.

3 ஆவது விக்கெட்டுக்கு 84 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த இந்த ஜோடியில் மாலன் 50 ஓட்டங்களில் அவுட்டாக அடுத்ததாக வந்த கப்டன் பட்லர் பொறுப்பின்றி ஒரு ஓட்டத்துடன் நடையைக் கட்டினார்.

போராடிய பென் ஸ்டோக்ஸ் 64 ஓட்டங்களில் அவுட்டாக காப்பாற்றுவார் என்று கருதப்பட்ட லியம் லிவிங்ஸ்டனும் 2 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

மொயின் அலியும் போராடி 42 ஓட்டங்களில் அவுட்டானதால் இறுதியில் கிறிஸ் ஓக்ஸ் 32, ரசித் 20 ரன்கள் எடுத்தும் 48.1 ஓவரில் இங்கிலாந்து 253 ஓட்டங்கள் எடுத்தது.

அவுஸ்திரேலியா 33 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆடம் ஜாம்பா 3, ஜோஸ் ஹேசல்வுட், மிட்சேல் ஸ்டார்க், கப்டன் கமின்ஸ் தலா 2 விக்கெட்டுகளை சாய்த்தனர். அதனால் 7 போட்டிகளில் 5 ஆவது வெற்றியைப் பதிவு செய்த அவுஸ்திரேலியா செமி ஃபைனல் வாய்ப்பை 99% உறுதி செய்துள்ளது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 05.11.2023 அன்று வெளியிடப்பட்டது.